# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**முறையீட்டு மனு எண். 14/ந/2018**

**ஆணை எண். 19/2018**

**நாள் : 02/02/2018**

**திரு க. மருதையா,**
**சங்கரன் கோவில்.**

**– முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**கடையநல்லூர் நகராட்சி,**
**கடையநல்லூர்.** **– எதிர் மனுதாரர்**

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன் கோவில், எண்.102, முல்லை நகர் முகவரியில் வசிக்கும் திரு க.மருதையா அவர்களின் 13.11.2017 நாளெண்ணிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 14.11.2017 அன்று பெறப்பட்டு, 14/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு, கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன் கோவில், எண்.102, முல்லை நகர் முகவரியில் வசிக்கும் திரு க.மருதையா என்பவர் கடையநல்லூர் நகராட்சிக்குட்பட்ட கிருஷ்ணாபுரம் கிராமத்தில் I– அக்குவா மினரல் வாட்டர் தொழிற்சாலைக்கு அரசு விதிக்குப் புறம்பாக உரிமம் வழங்கியதால் தனக்கு ரூ.25 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும், மேற்குறிப்பிட்ட இழப்பீட்டுத் தொகையினை கடையநல்லூர் நகராட்சி ஆணையர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து பெற்றுத் தரக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். மேலும், மேற்படி தொழிற்சாலைக்கு உரிமம் வழங்கியது செல்லாது என சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை தெரிவித்துள்ள தீர்ப்பினையும் குறிப்பிட்டுள்ளார்.

2. மனுதாரரின் கோரிக்கை மற்றும் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை இம்முறைமன்ற நடுவம் ஆய்வு செய்தது. 21.08.2017 நாளெண்ணிட்ட சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை 4820/2017 மற்றும் 21936/2016 எண்ணிட்ட நீதிமன்றப் பேராணைகளில் கீழ்க்காணும் தீர்ப்பினை வழங்கியுள்ளது :-

> *"…..the effect on ground water level on account of the writ petitioner's activities will have to be re-ascertained. The concerned authorities will have to undertake afresh verification exercise. The Commissioner, Kadayanallur Municipality will thereafter decide the issue afresh in accordance with law."*

*"…..It is seen that the writ petitioner(in W.P.No.21936/2016) had invested considerable sum of money to run same, only after getting orders from the concerned department. By virtue of directions given in this proceeding, the said plant cannot run, till fresh license is obtained. The Commissioner, Kadayanallur Municipality shall decide the matter and pass appropriate orders after associating the concerned authorities. "*

மேற்குறிப்பிட்ட தீர்ப்பினை ஆய்வு செய்ததில் மேற்படி மினரல் வாட்டர் நிறுவனத்திற்கு விதிகளுக்கு முரணாக உரிமம் வழங்கப்பட்டுள்ளதென எந்தவொரு நகராட்சி அலுவலர் குறித்தும் தீர்ப்பில் தெரிவிக்கப்படவில்லை. எனவே, மனுதாரர் கோரும் இழப்பீட்டுத் தொகையினை கடையநல்லூர் நகராட்சி அலுவலர்களிடமிருந்து பெற்றுத் தர இம்முறைமன்ற நடுவத்தால் ஆணையிட இயலாது எனத் தெரிவித்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

**2018–** ஆம் ஆண்டு, **பிப்ரவரி** திங்கள், **2–**ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. **நகராட்சி ஆணையர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**
**கடையநல்லூர்,**
**திருநெல்வேலி மாவட்டம்.**

2. **க. மருதையா,**
**எண்.102, முல்லை நகர்,**
**சங்கரன் கோவில் – 627 756.**
**திருநெல்வேலி மாவட்டம்.**

**நகல் :** **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**